**ஜனவரி – 22**

# TNPSC துளிகள்

- தொழில் மற்றும் பொருளாதார அடிப்படைகளுக்கான ஆராய்ச்சி அமைப்பானது (BRIEF - Bureau of Research on Industry and Economic Fundamentals) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையானது இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லைகளில் வாழும் மக்களுக்கிடையேயான வர்த்தக நிறுத்தத்தின் தாக்கம் குறித்து கோடிட்டுக் காட்டுகின்றது.
    - இந்த அறிக்கையானது "ஒருதலைப் பட்சமான முடிவுகள், இருதரப்பு இழப்புகள்" என்று அழைக்கப் படுகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## டைகர் ஷார்க்ஸ் படைப் பிரிவு

- சுகோய் - 30 எம்கேஐ போர் விமானங்களின் 222 என்ற படைப் பிரிவானது இந்திய விமானப் படையால் தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர் விமானப் படைத் தளத்தில் இணைக்கப் பட்டது.
- இந்தப் படைப் பிரிவிற்கு " டைகர் ஷார்க்ஸ்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- சமீபத்தில் தமிழ்நாட்டில் இணைக்கப்பட்ட படைப் பிரிவுடன் சேர்த்து இதுவரையில் இந்தியாவில் தற்பொழுது 12 “டைகர் ஷார்க்ஸ்” படைகள் இணைக்கப்பட்டுள்ளன.




- இந்தப் படையானது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் வேகமாக விரிவடைந்து வரும் உத்திசார் ஆதிக்கத்தைக் கண்காணிப்பதற்காக தமிழகத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.
- சீனா தனது முதலாவது இராணுவத் தளத்தை / அயல்நாட்டு இராணுவ உதவித் தளத்தை “ஆப்பிரிக்காவின் கொம்பு” என்று அழைக்கப்படும் பகுதியைச் சுற்றியுள்ள ட்ஜிபூட்டியில் (Djibouti) நிறுவியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தொழில்நுட்ப மாநாடு 2020

- தேசியத் தகவல் மையமானது (National Informatics Centre - NIC) தொழில்நுட்ப மாநாட்டை புது தில்லியில் நடத்தி இருக்கின்றது.
- இந்த மாநாடானது தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்து விவாதிக்க இருக்கின்றது.
- இந்த மாநாடானது "அடுத்தத் தலைமுறை ஆளுகைக்கான தொழில்நுட்பங்கள்" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற உள்ளது.
- சமீபத்தில், NIC ஆனது பெங்களூரில் தொடரேடுத் தொழில்நுட்ப மையத்தைத் தொடங்கியுள்ளது.

## குடியரசு தின அணிவகுப்பு 2020

- புது தில்லியில் உள்ள ராஜ்பாத்தில் நடைபெறவுள்ள 2020 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் ஸ்டார்ட் அப் இந்தியா (புதிதாகத் தொழில் தொடங்குதல்) குறித்த காட்சிப் படத்தை மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழில் துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது (Department of Promotion of Industry and Internal Trade - DPIIT) காட்சிப்படுத்த உள்ளது.
- இந்தக் காட்சிப் படமானது "உச்சத்தை (உயர்ந்த நிலை) அடைய வேண்டும்" என்ற கருப்பொருளின் கீழ் காண்பிக்கப்பட உள்ளது.




- குடியரசு தின அணிவகுப்பில் "ஸ்டார்ட் அப் இந்தியா" பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.
- 2020 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் இந்தியக் கடற்படையானது "அமைதி, வலிமை மற்றும் விரைவு" என்ற கருப்பொருளின் கீழ் தனது காட்சிப் படத்தை காட்சிப்படுத்த உள்ளது.
- 2020 குடியரசு தின அணிவகுப்பில், டானியா ஷெர்கில் என்பவர் அனைத்து ஆண்கள் படையை வழிநடத்தும் முதலாவது பெண் அதிகாரியாக உருவெடுக்க இருக்கின்றார்.

# சர்வதேசச் செய்திகள்

## இருதரப்பு முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் (BIPA)

- இந்தியாவுடனான இருதரப்பு முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை (Bilateral Investment Protection Agreement - BIPA) ஆராய ஐரோப்பிய ஒன்றியமானது (European Union - EU) விருப்பம் தெரிவித்துள்ளது.
- இது முன்மொழியப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (free trade agreement - FTA) இருந்து மாறுபாடு கொண்டதாக இருக்கும். இந்த BIPA ஆனது தற்பொழுது பேச்சுவார்த்தைகள் மூலம் அடுத்தக் கட்டத்திற்கு முன்னேறும் நிலையில் உள்ளது.
- 2007 ஆம் ஆண்டில், இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் ஒரு பரந்த நோக்கு அடிப்படையிலான இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டு ஒப்பந்தம் (Bilateral Trade and Investment Agreement - BTIA) தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கின.

### *BIPA பற்றி*

- இது ஒரு இருதரப்பு ஒப்பந்தமாகும். இரு நாடுகளிலும் உள்ள நிறுவனங்களால் இரு நாடுகளைச் சேர்ந்த பிராந்தியங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் பரஸ்பர ஊக்கம், ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக இரு நாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்படும் ஒரு ஒப்பந்தம் என்று வரையறுக்கப்படுகின்றது.
- இந்தியத் தரப்பில், இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் இந்தியாவில் மூலதன ஓட்டத்தை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் உள்ள இந்திய முதலீட்டாளர்களுக்குப் பாதுகாப்பான வணிகச் சூழலையும் வழங்குகின்றது.
- இந்தியாவானது 1994 ஆம் ஆண்டில் இங்கிலாந்துடன் முதலாவது BIPAவில் கையெழுத்திட்டுள்ளது.

## உலகளாவிய சமூக இயங்குதிறன் குறியீடு

- உலகப் பொருளாதார மன்றமானது சமூக இயங்குதிறன் குறியீட்டை வெளியிட்டு உள்ளது.
- இந்தக் குறியீடானது உலகெங்கிலும் உள்ள மக்களின் சமூக இயங்குதிறனை அளவிடுகின்றது.
- சமூக இயங்குதிறன் என்பது ஒரு நபரின் தனிப்பட்டச் சூழ்நிலைகளில் அவரது பெற்றோர்களுடன் ஒப்பிடும் போது அவருக்கு ஏற்படும் ஏற்றம் அல்லது இறக்கம் போன்ற ஒரு சூழ்நிலையாகும்.
- நாடுகளின் சமூக இயங்குதிறனானது பின்வரும் 5 முக்கியப் பரிமாணங்களின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது. அவையாவன
    - சுகாதாரம்,
    - கல்வி - தரம், அணுகல் மற்றும் சமத்துவம்,
    - தொழில்நுட்பம்,
    - பணி - ஊதியங்கள், நிபந்தனைகள் மற்றும் வாய்ப்புகள்,
    - பாதுகாப்பு மற்றும் நிறுவனங்கள் - உள்ளடக்கிய நிறுவனங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு.
- ஒப்பீட்டுச் சமூக இயக்கம் என்பது ஒரு நபரின் வாழ்க்கையில் உள்ள சமூக - பொருளாதார பின்னணியின் விளைவை மதிப்பிடுவதாகும்.

- ❖ இந்த அறிக்கையின் படி, இந்தக் குறியீட்டில் டென்மார்க் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து இந்தக் குறியீட்டில் பின்லாந்து, நார்வே, சுவீடன் மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- ❖ இந்த அறிக்கையில் மொத்தமுள்ள 82 நாடுகளில் இந்தியா 76வது இடத்தில் உள்ளது.




- ❖ சமூகப் பாதுகாப்பு (76வது) மற்றும் நியாயமான ஊதியம் வழங்குதல் (79வது) ஆகியவை இந்தியா முன்னேறியுள்ள பகுதிகளாகும்.
- ❖ இந்த அறிக்கையின் படி, நான்காவது தொழில்துறைப் புரட்சியானது பல சமூக ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கியுள்ளது.

## உலகளாவிய முதலீட்டு போக்குகள் கண்காணிப்பு அறிக்கை

- ❖ வர்த்தக மற்றும் மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் நிறுவனமானது தனது 2019 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தக் குறியீட்டில் உலகில் அதிக அந்நிய நேரடி முதலீட்டை (FDI - Foreign Direct Investment) ஈர்த்து 2019 ஆம் ஆண்டில் சீனா முதலிடத்தில் இருக்கின்றது. 2018 ஆம் ஆண்டிலும் இந்தக் குறியீட்டில் சீனாவே முதலிடத்தில் நீடித்தது. இந்தக் குறியீட்டில் அதற்கு அடுத்த இடத்தில் அமெரிக்கா உள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டில் அமெரிக்கா 251 பில்லியன் அமெரிக்க டாலர் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்தது. இதில் சீனாவிலிருந்து வந்த முதலீடானது 140 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- ❖ 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தெற்காசியாவில் அந்நிய நேரடி முதலீடானது 10% அதிகரித்துள்ளது என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் FDI காரணமாக தெற்காசியாவில் அந்நிய நேரடி முதலீட்டின் வளர்ச்சியானது முதன்மையாக இருந்தது.
- ❖ 2019 ஆம் ஆண்டில், இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடானது 49 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- ❖ 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீடானது இந்தியாவில் 16% அதிகரித்துள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- ❖ இந்தியாவில் FDIன் பெரும்பகுதியானது தகவல் தொழில்நுட்பத் துறைக்குச் சென்று உள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## இருதரப்பு சர்வதேச ஒப்பந்த அமைப்பு

- சர்வதேச நடுவர் தீர்ப்பாயமான இருதரப்பு சர்வதேச ஒப்பந்த அமைப்பானது (Bilateral International Treaty organization - BIT) சமீபத்தில் இந்தியாவிற்கு எதிரான அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்தது.
- இந்தியாவிற்கு எதிரான இந்த மனுக்கள் சைப்ரஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் உள்ள தனியார் நிறுவனங்களால் இந்த அமைப்பிற்குக் கொண்டு வரப்பட்டன.
- BIT என்பது அந்நிய நேரடி முதலீட்டிற்காக நிறுவப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும்.
- இது இரு நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கான விதிகளை அமைக்க இரு நாடுகளையும் அனுமதிக்கின்றது.
- இந்த ஒப்பந்தமானது 19 ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட நட்பு, வர்த்தகம் மற்றும் கண்காணிப்பு ஒப்பந்தத்திற்கு அடுத்து மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தம் ஆகும்.
- முதல் BIT ஆனது பாகிஸ்தானுக்கும் ஜெர்மனிக்கும் இடையே கையெழுத்தானது.
- உள்நாட்டு முதலீட்டாளர்களைப் போலவே வெளிநாட்டு முதலீட்டாளர்களும் சமமாக நடத்தப்படுவதை BIT உறுதி செய்கின்றது.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துவதற்காக BITயில் இந்தியா கையெழுத்திடுவது முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.
- உலகில் உள்ள பெரும்பாலான ஒப்பந்தங்கள் 'மிகவும் விரும்பப்படும் தேசம்' என்ற நிலையின் மீது கவனம் செலுத்துகையில், BIT மட்டும் வெளிநாட்டு முதலீட்டாளர்களைச் சமமாக நடத்துகின்றது.
- இந்தியா இதுவரை 75 நாடுகளுடன் BITயில் கையெழுத்திட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காகிதமில்லா உரிமம் வழங்கும் செயல்முறை

- தொழில் துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையானது (Department of Industry and Internal Trade - DPIIT) பெட்ரோலிய விதிகள், 2002ன் கீழ் பெட்ரோலியச் சேவை நிலையங்களுக்கு காகிதமில்லா உரிமம் வழங்கும் ஒரு செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- இந்த உத்தரவைச் செயல்படுத்தும் நிறுவனம் பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் பாதுகாப்பு அமைப்பு (Petroleum and Explosives Safety Organization - PESO) ஆகும்.
- PESO ஆனது DPIITயின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு துறையாகும். இந்த இரு அமைப்புகளும் மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.
- இது வெடி பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி, சேமிப்பு, போக்குவரத்து மற்றும் பயன்பாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றது.
- PESO ஆனது பின்வரும் சட்டங்களை நிர்வகிக்கின்றது. அவையாவன:
    - வெடிக்கும் பொருள்கள் சட்டம் 1884,

- பெட்ரோலியச் சட்டம் 1934,
- வெடிபொருள்கள் சட்டம்,
- எரியக்கூடிய பொருள்கள் சட்டம் 1952,
- சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986.


## கார்பன் வெளிக் கொணர்தல் திட்டம்

- கார்பன் வெளிக் கொணர்தல் திட்டம் என்பது பல்வேறு நாடுகள் மற்றும் அந்த நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் கார்பன் குறைப்பு நடவடிக்கைகள் குறித்து வெளியிடப்படும் ஒரு வருடாந்திர அறிக்கை ஆகும்.
- இது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான குளோபல் ரிப்போர்டிங் என்ற நிறுவனத்தின் முன்முயற்சியினால் (Global Reporting Initiative) வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின் படி, கார்பன் குறைப்பு தொடர்பான பெருநிறுவனப் பொறுப்புகளின் அடிப்படையில் நாடுகள் தரவரிசைப் படுத்தப்பட்டன.
- இந்திய நிறுவனங்களிடையே, இன்போசிஸ், டால்மியா சிமெண்ட் மற்றும் டாடா மோட்டார்ஸ் ஆகிய நிறுவனங்கள் 100% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வை மேற்கொண்டுள்ளன.
- இந்தப் பட்டியலில் 135 நிறுவனங்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் அமெரிக்காவைத் தொடர்ந்து ஜப்பான் 83 நிறுவனங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களை முறையே முறையே ஐக்கிய ராஜ்ஜியம் (78), பிரான்சு (51), இந்தியா (38) ஆகிய நாடுகள் பிடித்துள்ளன.

# மாநிலச் செய்திகள்

## புனே - மும்பை ஹைப்பர்லூப் திட்டம்

- முன்மொழியப் பட்ட புனே - மும்பை ஹைப்பர்லூப் திட்டத்தை மகாராஷ்டிரா மாநில அரசு ரத்து செய்ய இருக்கின்றது.
- இது ஒரு அதி நவீனப் போக்குவரத்து அமைப்பாகும். இது இந்த இரு நகரங்களுக்கிடையிலானப் பயண நேரத்தை 2.5 - 3 மணி நேரத்திலிருந்து 25 நிமிடங்களாகக் குறைக்கும்.
- இந்தத் திட்டமானது "உலகில் எங்கும் செயல்படுத்தப் படவில்லை" என்றும் இன்னும் சோதனை நிலையிலேயே இருந்ததாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.
- இது ஒரு போக்குவரத்து அமைப்பாகும். இதில் விமானத்திற்கு இணையான வேகத்தில் ஒரு போட் போன்ற வாகனமானது நகரங்களை இணைக்கும் வெற்றிடக் குழாய் வழியாகச் செலுத்தப் படுகின்றது.
- ஹைப்பர்லூப் என்ற கருத்தாக்கமானது டெஸ்லா நிறுவனர் எலோன் மஸ்கின் ஒரு சிந்தனை முயற்சியாகும்.


SPEEDY PODS
In Hyperloop, passengers and freight are carried in pods via electro-magnetic propulsion through a low-pressure tube
The medium is a fast, direct-to-destination transport mode. It can achieve speed of up to 1,080km per hour
WHAT IT MEANS
If Hyperloop becomes a reality, one can travel from Pune to Mumbai in 14 minutes
The project for the 100km stretch would cost about ₹26,000 crore
The per kilometre estimated cost is ₹260 crore
BABY STEPS
The Hyperloop technology is in its nascent stage
The world's first full-scale Hyperloop test site was developed in Las Vegas
Projects are under way in the Netherlands, Abu Dhabi to Dubai, and Stockholm to Helsinki

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆